# பரலோகம் என்ன? எங்கிருக்கிறது?

**PV. Jesudas**

ஒரு காலத்தில் மகமதியர்கள் ஆப்கானிஸ்தானிலிருந்து இந்திய நாட்டிற்கு படையெடுத்து வந்தார்கள். அப்பொழுது இந்தியாவில் ரஜபுத்திரர்கள் என்ற கனம் பொருந்திய பெரிய அரசர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் மிகவும் வீரம் பொறுந்தியவர்களாகவும் பராக்கிரமசாலிகளாகவும் இருந்தார்கள். ஆகவே அந்த மகமதியர்களில் பாபர் என்ற தளபதி சிறிய சேனையோடுதான் இந்தியாவிற்கு படையெடுத்து வந்தார். அவர் வந்து இந்திய சேனைகளை தோற்கடித்து இந்தியாவிலே தன்னுடைய அரசை ஸ்தாபித்தார் என்று சரித்திரத்திலே சொல்லப்படுகிறது.மகமதியர்கள் எப்படி அந்த ரஜபுத்திரர்களை தோற்கடித்தனர்? அவர்கள் கையாண்ட விதி முறைகள் என்ன? தாங்கள் கொள்ளையடிக்கிற பணங்களை எந்த விதமான வித்தியாசங்களன்றி அணைவரும் (அரசர்கள்,சேனை தலைவர்கள்,சேனைகள்) சமமாக பங்கிட்டுக்கொள்வார்கள்.அதற்கு வாக்குறுதியும் செய்துகொள்வார்கள்.அடுத்து இந்த போர் ஒரு தர்மயுத்தமாக அவர்களுக்கு போதிக்கப்பட்டது.அதாவது இந்த போரில் யாராகிலும் இறந்தார்களென்றால், அவர்கள் பரலோகத் திற்கு சென்றுவிடுவார்கள். அங்கு அவர்களுக்கு ஏராளமான இன்பங்களும் கொடுக்கப்படும் என்ற வாக்குறுதிகள் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்தது. ஆகவே அந்த வீரர்கள் இறந்தாலும் பரலோகத்திற்கு செல்லலாம் இருந்தாலும் பணம் பொருட்களை மகிழ்ச்சியோடு அனுபவிக்கலாம் என்று வீரமாக போரிட்டார்கள்.

**பரலோகத்தை பற்றி புறமதங்கள்**

மகமதியம்(முஸ்லீம்), இந்து, மற்ற வேறு மார்க்கத்திலும் பரலோகத்தை பற்றி ஓரளவிற்கு பேசப்படுகிறது.




கைலாயம், மோட்சம் என்ற கருத்துக்கள் இந்து மார்க்கத்திலே பரவிக் கிடக்கிறது.

மகமதிய மார்க்கத்திலும் பரலோகத்தையும் தேவதூதர் களையும் விசுவாசிக்கிறார்கள். புத்த மார்க்கத்திலே பரலோகம் என்றால் நிர்வானா என்ற ஒரு நிலமை இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். மஸ்தான் என்ற ஒரு பாடகர் பரலோகம் என்றால் குணகுடி என்று பாடினார். திருவள்ளுவர் அரம், பொருள், இன்பம் ,வீடு என்று நான்கு விசேஷமான பொருள்களை பற்றி சொன்னார். அரம், பொருள், இன்பம் என்பதை பற்றி பாடினார் ஆனால் வீடு என்பதை பற்றி அவர் பாடவில்லை. இந்த மூன்றையும் கடைப்பிடித்தால் வீடு பெறலாம் என்று சொல்லிமுடித்தார் பரலோகத்தை பற்றின காரியங்கள் கிறிஸ்தவர்கள் வைத்திருக்கும் பரிசுத்த வேதாகமம் மட்டுமே மிக விளக்கமாக சொல்லுகிறது.

**பரலோகத்தை பற்றி விஞ்ஞானம்**


நம்முடைய சூரியனை சுற்றி ஒன்பது கிரகங்கள் ஓடிக் கொண்டிருக்கிறது.




இந்த கிரகங்களை சுற்றி 33 சந்திரன்கள் ஓடிக்கொண்டிருக்கிறது. சூரியன் காந்தமண்டல சக்தியாக இருப்பதால் பூமியையும் மற்ற

கிரகங்களையும் தனது சக்தியால் பிடித்து மற்ற கிரகங்களையும் தனது சக்தியால் பிடித்து இழுத்துகொண்டு சுற்றி வருகிறது.

இந்த அண்டசராசரத்தில் நம்முடைய சூரியனை விட ஆயிர மாயிரம் சூரியன்கள் இன்னும் இருக்கிறது. இந்த ஆயிரக் கணக்கான சூரியன்களை ஒரு பெரிய சூரியன் தனது காந்த சக்தியால் பிடித்து இழுத்துகொண்டு சுற்றி வருகிறது. அந்த சூரியனுக்கு செல்சியஸ் என்று பெயர்.நம்முடைய பால்வீதி மண்டலத்திலே 12 கோடி சூரியன்கள் இருக்கிறது. பால்வீதி மண்டலத்தை ஆங்கிலத்தில் சொல்ல போனால் கேலக்ஸி அல்லது நெபுலா என்று சொல்லுவார்கள்.



இந்த 12 கோடி சூரியன்களை க்லைடிஸ் என்று சொல்லப்பட்ட ஒரு நட்சத்திரம் தனது காந்தசக்தியால் பிடித்து இழுத்துகொண்டு சுற்றி வருகிறது.இவைகள் கற்பனைகள் அல்ல நிச்சயமாக விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்டவைகள்.


இப்படியிருக்க இந்த பால்வீதி மண்டலங்களின் மத்தியில் ஏதோ ஒரு மகா பெரிய சக்தி இழுத்து பிடித்துக்கொண்டிருக்கிறது என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.ஆனால் அந்த மத்திய சக்தி என்ன? அது ஒரு பெரிய சூரியனா? கிரகமா? உலகமா? என்று இன்றுவரை அவர்களால் பார்க்கமுடியவில்லை.ஆகவே இந்த பால்வீதிகளின் ஓட்டங்களை கணக்கு பார்த்து விஞ்ஞானிகள் பால்வீதிகளின் மத்தியில் ஏதோ ஒரு பெரிய சக்தியிருக்கிறது



என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். நாம் அதை பரலோகம் என்று கணிக்கிறோம் விசுவாசிக்றோம். ஆகவே அந்த பரலோகமானது இத்தனை பால்வீதி மண்டலங்களை தனது சக்தியால் பிடித்துகொண்டிருக்கிறதென்றால், அதனளவு எவ்வளவு பெரியதாக இருக்கும் என்று சிந்தித்து பாருங்கள்.

## பரலோகத்தை பற்றி பரிசுத்த வேதாகமம்

கர்த்தர் வானங்களில் தமது சிங்காசனத்தை ஸ்தாபித்திருக்கிறார்; அவருடைய ராஜரிகம் சர்வத்தையும் ஆளுகிறது. **சங்கீதம் 103. 19** தேவன் மெய்யாக பூமியிலே வாசம் பண்ணுவாரோ? இதோ, வானங்களும் வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே; நான் கட்டின இந்த ஆலயம் எம்மாத்திரம்? **1 இராஜாக்கள் 8. 27** உம்முடைய வாசஸ்தலமாகிய பரலோகத்தில் இருக்கிற தேவரீர் கேட்டு மன்னித்து **1 இராஜாக்கள் 8. 39** வானத்திலே தம்முடைய சிங்காசனத்தை ஸ்தாபித்தார் என்று வேதம் கூறுகிறது. பரலோகத்திலிருந்து ஆண்டவர் அண்டசராசரங்களில் எல்லாவற்றையும் தம்முடைய கைகளின் வல்லமைகளினாலே தாங்கி வருகிறார் என்று வேதம் சொல்லுகிறது. நீர் ஒருவரே **கர்த்தர்**; நீர் வானங்களையும், வானாதி வானங்களையும், அவைகளுடைய சர்வ சேனைகளையும் பூமியையும் அதிலுள்ள எல்லாவற்றையும், சமுத்திரங்களையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கினீர்; அவைகளையெல்லாம் நீர் காப்பாற்றுகிறீர்; வானசேனைகள் உம்மைப் பணிந்துகொள்ளுகிறது. **நெகேமியா 9. 6** வானத்தில் அநேக வானங்கள் இருக்கிறது என்று மேலேயுள்ள வசனங்கள் சொல்லுகிறது. அப்படியென்றால் வானங்களை பற்றி வேதம் இன்னும் என்ன விளக்கம் கூறுகிறது? கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷனை அறிவேன்; அவன் பதினாலு வருஷத்திற்கு முன்னே மூன்றாம் வானம்வரைக்கும் எடுக்கப்பட்டான்; அவன் சரீரத்திலிருந்தானோ, சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானோ, அதை அறியேன்; தேவன் அறிவார். **2 கொரிந்தியர் 12. 2** திருமறை மூன்று வானங்கள் உண்டு என்று சொல்லுகிறது. முதல் வானம் ஆகாயமண்டலம் , இந்த பூமியிலிருந்து ஏறகுறைய 100 மைல் அளவில் காற்றுமண்டலம் இருக்கிறது.




அதற்கு பெயர் ஆகாயமண்டலம். தேவன் ஆகாய விரிவை உண்டு பண்ணி, ஆகாயவிரிவுக்குக் கீழே இருக்கிற ஜலத்திற்கும் ஆகாயவிரிவுக்கு மேலே இருக்கிற ஜலத்திற்கும் பிரிவுண்டாக்கினார்; அது அப்படியே ஆயிற்று. தேவன் ஆகாயவிரிவுக்கு வானம் என்று பேரிட்டார்; சாயங்காலமும் விடியற்காலமுமாகி இரண்டாம் நாள் ஆயிற்று. **ஆதியாகமம் 1.7,8** இந்த முதல் வானத்தில் தான் மனிதர்கள் மிருகங்கள் மற்ற எல்லா ஜீவராசிகளும் வாழ்ந்து வருகிறோம். இரண்டாவது வானம் எங்கேயிருக்கிறது? வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது. அவைகளுக்குப் பேச்சுமில்லை, வார்த்தையுமில்லை, அவைகளின் சத்தம் கேட்கப்படுவதுமில்லை. ஆகிலும் அவைகளின் சத்தம் பூமி யெங்கும், அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசிவரைக்கும் செல்லுகிறது; அவைகளில் சூரியனுக்கு ஒரு கூடாரத்தை ஸ்தாபித்தார். அது தன் மணவறை யிலிருந்து புறப்படுகிற மணவாளனைப்போலிருந்து, பராக்கிரமசாலியைப் போல் தன் பாதையில் ஓட மகிழ்ச்சியாயிருக்கிறது. அது வானங்களின் ஒரு முனையிலிருந்து புறப்பட்டு, அவைகளின் மறுமுனை வரைக்கும் சுற்றியோடுகிறது; அதின் காந்திக்கு மறைவானது ஒன்றுமில்லை. **சங்கீதம் 19.1-6** ஆகவே சூரியன் சந்திரன் நட்சத்திர மண்டலம் இருக்கும் இடம்தான் இரண்டாவது வானம். மூன்றாவது வானம் பரலோகமாயிருக்கிறது. மனிதர்கள் யாவரும் எந்த தொல்லைகளும் கஷ்ட்டங்களும் துன்பங்களும் நோய்களும் மரணமும் இல்லாமல் வாழ ஆசைப் படுகிறார்கள். ஆண்டவர் இந்த எண்ணத்தை நம் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் அஸ்தி பாரமாக போட்டிருக்கிறார். காரணம் அப்படிப்பட்ட ஒரு உலகம் இருக்கிறது என்று நமக்கு காண்பிக்கிறார். என்றைக்கும் சாகாமல் வாழும்படியான உலகம் இருக்கிறது. துன்பமில்லாத துயரமில்லாத கண்ணீரில்லாத கலக்கமில்லாத சஞ்சலமில்லாத ஒரு உலகம் இருக்கிறது. சமாதானத்தோடு என்றைக்கும் வாழவேண்டிய ஒரு உலகம் இருக்கிறது. அப்படிப்பட்ட உலகம் நமக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்டிருந்தது ஆனால் நாம் பாவம் செய்ததினால் அதை இழந்துபோனோம். அதற்காகவே திரும்பவும் நாம் அந்த வாழ்வை பெற்றுக்கொள்ள நமக்கு சந்தர்ப்பம் கொடுக்கப்படுகிறது வடதிசையிலுள்ள சீயோன் பர்வதம் வடிப்பமான ஸ்தானமும் சர்வபூமியின் மகிழ்ச்சியுமாயிருக்கிறது, அதுவே மகாராஜாவின் நகரம். **சங்கீதம் 48.2** அவர் பாராதபடிக்கு மேகங்கள் அவருக்கு மறைவாயிருக்கிறது; பரமண்டலங்களின் சக்கரத்திலே அவர் உலாவுகிறார் என்று சொல்லுகிறீர். **யோபு 22.14** அப்படியானால் பரமண்டலம் ஒரு வட்டவடிவமான உலகம் என்று திருமறை சொல்லுகிறது.

**பரலோக காரியங்கள்**



எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காதுகேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை; **1 கொ 2.9** நம்முடைய சிந்தனைகளுக்கும் அப்பாற்ப்பட்ட பேரின்பங்களையும் ஆனந்தங்களையும் அழகையும் பலவிதமான அமைதியையும் ஆறதலையும் தேறுதலையும் ஆண்டவர் நமக்காக பரலோகத்திலே வைத்திருக்கிறார்.



இந்த உலகத்தில் துன்பங்களும் துயரங்களும் கஷ்ட்டங்களும் இன்னல்களும் வியாதிகளும் மரணத்தின் பள்ளத்தாக்கிலும் தேவனுடைய பிள்ளைகள் நடந்தாலும் ஆண்டவர் தமது பிள்ளைகளுக்கு சொல்லுகிற ஒரு விசேஷமான காரியம் உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். **யோவான் 14. 1** அப்படி நாம் தேவனிடத்தில் விசுவாசமாயிருந்தால் என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப் போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன். **யோவான் 14. 2, 3**



பிதா தம் ஒரே பேரான குமாரனையே பல துன்பங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். ஆணிகள் அடித்து வாரினால் அடித்து தலையிலே முள்முடி சூட்டினது மட்டுமல்லாமல் மரணமும் அடைந்தார். பிதா தன்னுடைய ஒரே மகன் , சர்வவல்லமையுள்ள தேவன் மனிதனாகி அவ்வளவு பாடுகளை படும்போது பிதா பார்த்துக்கொண்டுதான் இருந்தார். நாம் எம்மாத்திரம்? நம்மையும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார். நமக்கும் ஒரு நேரம் வரும் ! அதுவரைக்கும் இந்த உலகத்தில் நமக்கு அன்பு நிம்மதி சந்தோஷம் இருக்காது. இந்த உலகத்தில் நமக்கு வாழ்வு 60 அல்லது 80 வருஷமிருந்தாலும் பரலோகத்திற்கு போனால் முடிவேயிருக்காது. நித்தியமாக வாழ்ந்துகொண்டிருப்போம். அதற்கு தேவை நாம் ஆண்டவரை விசுவாசிக்கவேண்டும். பரலோகம் என்பது ஏதோ ஒரு கற்பனையல்ல. ஏதோ ஆவிகள் மேகங்களோடே உலாவி கொண்டிருப்பதல்ல! அது நிச்சயமான ஒரு உலகமாயிருக்கிறது. அங்கேயும் மரம் செடி கொடிகள் மிருகங்கள் யாவும் இருக்கிறது. ஆனால் சாபம் வாங்கின நம்முடைய உலகம் போலிருக்காது. அங்கு எங்கும் சந்தோஷம் நிலவியிருக்கும். நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல, அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக்கண்டவர்களாகவே நம்முடைய **கர்த்தராகிய** இயேசுகிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம். **2 பேதுரு 1. 16** ஆகவே பரலோகம் என்பது ஒரு கதையல்ல அது உண்மை நிச்சயம். அப்படி நாம் பரலோத்திற்குள் எந்த இடத்திற்கு செல்லபோகிறோம்? பெரிதும் உயரமுமான ஒரு பர்வதத்தின்மேல் என்னை ஆவியில் கொண்டுபோய், தேவனுடைய மகிமையை அடைந்த எருசலேமாகிய பரிசுத்தநகரம் பரலோகத்தைவிட்டு தேவனிடத்திலிருந்து இறங்கிவருகிறதை எனக்குக் காண்பித்தான். **வெளி 21. 10** ஆகவே அந்த பரலோகத்தில் நாம் போகிற இடம் புதிய எருசலேமாக இருக்கிறது. ஆகவே மேலே கொடுக்கப்பட்ட வசனத்திலே 10 முதல் 27 வசனம் வரைக்கும் அந்த புதிய எருசலேமை பற்றி அதிகமாக ஆண்டவர் சொல்லுகிறார். ஆகவே அந்த பட்டணத்திலேதான் ஆயிரம் வருஷம் இருக்க போகிறோம்.




அந்த பட்டணத்திலேதான் தேவனுடைய சிங்காசனம் இருக்கிறது. அந்த பட்டணம்தான் பரலோகத்தின் தலைநகர பட்டணம்.




அந்த பட்டணத்தில்தான் நமக்கென்று ஸ்தலங்களை உருவாக்கி வைத்திருக்கிறார். ஆயிரம் வருஷம் கழிந்து நாம் திரும்பவும் இந்த உலகத்தில் வரும்போது அந்த புதிய எருசலேமும் இந்த உலகத்தில் வந்துவிடும். ஏன் அந்த புதிய எருசலேம் இந்த உலகத்திற்கு வருகிறதென்றால் இந்த உலகம்தான் இனிமேல் அண்டசராசரங்களுக்கு தலைமை யீடமாக இருக்க போகிறது. ஆகவே மற்ற எல்லா உலகத்து மக்களும் நம் உலகத்திற்கு வந்துதான் ஆண்டவரை தொழுது சேவிக்க வேண்டும். அப்படியானால் மீட்கப்பட்ட நாம் ஆண்டவருக்கு ராஜரீக கூட்டமாகயிருப்போம்! அந்த புதிய எருசலேம் எப்படியிருக்கும் என்று வேதம் நமக்கு சொல்லுகிறது. அதின் பிரகாசம் மிகவும் விலையுயர்ந்த இரத்தினக்கல்லைப்போலவும், பளிங்கினொளியுள்ள வச்சிரக்கல்லைப்போலவும் இருந்தது. அதற்குப் பெரிதும் உயரமுமான மதிலும், கிழக்கே மூன்று வாசல்கள், வடக்கே மூன்று வாசல்கள், தெற்கே மூன்று வாசல்கள், மேற்கே மூன்று வாசல்கள் ஆகப் பன்னிரண்டு வாசல்களும் இருந்தன. வாசல்களின்



அருகே பன்னிரண்டு தூதர்களிருந்தார்கள்; அந்த வாசல்களின்மேல் இஸ்ரவேல் சந்ததியாராகிய பன்னிரண்டு கோத்திரத்தாருடைய நாமங்களும் எழுதப்பட்டிருந்தன. நகரத்தின் மதிலுக்குப் பன்னிரண்டு அஸ்திபாரக்கற்களிருந்தன; அவைகள்மேல் ஆட்டுக்குட்டியானவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலரின் பன்னிரண்டு நாமங்களும் பதிந்திருந்தன. **வெளி 21. 11-14** இங்கு பரலோகம் மிகவும் பிரகாசமாக இருக்கிறதை நாம் இந்த வசனத்தில் மூலமாக காண்கிறோம். என்னுடனே பேசினவன், நகரத்தையும் அதின் வாசல்களையும் அதின் மதிலையும் அளக்கிறதற்கு ஒரு பொற்கோலைப் பிடித்திருந்தான். அந்த நகரம் சதுரமாயிருந்தது, அதின் அகலமும் நீளமும் சமமாயிருந்தது. அவன் அந்தக் கோலினால் நகரத்தை அளந்தான்; அது பன்னீராயிரம் ஸ்தாதி அளவாயிருந்தது; அதின் நீளமும் அகலமும் உயரமும் சமமாயிருந்தது. அவன் அதின் மதிலை அளந்தபோது, அது தூதனுடைய அளவாகிய மனுஷ அளவின்படியே நூற்றுநாற்பத்துநான்கு முழமாயிருந்தது. அதின் மதில் வச்சிரக்கல்லால் கட்டப்பட்டிருந்தது; நகரம் தெளிந்தபளிங்குக்கு ஒப்பான சுத்தப் பொன்னாயிருந்தது. **வெளி 21. 15-18** பன்னீராயிரம் ஸ்தாதி என்று கணக்கு பார்த்தால் 375 மைல் அகலமாகவும் 375 மைல் நீளமாகவும் இருக்கிறது. இன்னும் கணக்கு போட்டு பார்த்தால் அது 9 கோடி ஏக்கர் நிலமாக இருக்கிறது. அந்த நகரமே பொன்னாலும் வச்சிரக்கற்களாலும் கட்டப்பட்டிருக்கிறது என்று வேதம் சொல்லுகிறது. ஆபிரகாம் இந்த நகரத்தை பற்றி அறிந்திருந்தபடியால் கூடாரத்திலே குடியிருந்து அந்த நகரத்திற்கு போகவேண்டுமென்ற ஆசையினால் அவன் நீதிமானாகவும் உண்மையும் உத்தம முள்ளவனாகவும் ஆண்டவரை விசுவாசித்தவனாகவும் நடந்து கொண்டான். அப்படியே ஈசாக்கும் யாக்கோபும் இருந்தார்கள் நம் முற்பிதாக்கள் அந்த நகரத்தை பார்த்து ஆசித்து அதின் மேல் விருப்பம் கொண்டு அந்த நகரத்தை அடையவேண்டும் என்றே வாழ்ந்தார்கள் என்று திருமறை நமக்கு சொல்லுகிறது. அப்படிப்பட்ட ஆவல் நம் ஒவ்வொரு உள்ளத்திலிருக்குமானால் நாம் வாழும் வாழ்க்கையே கர்த்தருக்குள்ளாக இருக்கவேண்டும். அப்படி நாம் பரலோகத்திற்கு போகும்போது நாம் செய்யும் முதல் காரியம் துன்மார்க்கரை நியாயம்தீர்ப்போம். அன்றியும், நான் சிங்காசனங்களைக் கண்டேன்; அவைகளின்மேல் உட்கார்ந்தார்கள்; நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்படி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இயேசுவைப்பற்றிய சாட்சியி னிமித்தமும் தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம் பண்ணப் பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும், மிருகத்தையாவது அதின் சொரூபத்தையாவது வணங்காமலும் தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளாமலும் இருந்தவர்களையும் கண்டேன். அவர்கள் உயிர்த்து கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள். **வெளி 20. 4** அடுத்து அவரோடே ஆயிரம் வருஷம் அரசாட்சி செய்வோம். ஆண்டவருடைய பிரதிநிதிகளாக இருந்து மற்ற

உலகங்களை நாம் ஒவ்வொருவரும் ஆண்டு கொண்டிருப்போம். அந்த புதிய எருசலேம் பட்டணம் இந்த



பூமிக்கு வந்தப்பிற்பாடும் , இங்கிருந்து நாம் மற்ற உலகங்களுக்கு பறந்து அரசாளுவோம். ஆகவே அப்பேர்ப்பட்ட அரசாட்சியை ஆண்டவர் தமது பிள்ளைகளுக்கு கொடுக்கிறார். எஜமான் அவனை நோக்கி: நல்லது உத்தம ஊழியக்காரனே, நீ கொஞ்சத்தில் உண்மையுள்ளவனாயிருந்தபடியால் பத்துப் பட்டணங்களுக்கு அதிகாரியாயிரு என்றான். அவனையும் அவன் நோக்கி: நீயும் ஐந்து பட்டணங்களுக்கு அதிகாரியாயிரு என்றான். **லூக்கா 19. 17, 19** புதிய ஏற்பாடானது கிரேக்க மொழியில் எழதப்பட்டது. நான் ஆராய்ச்சிக்கு படிக்கும்போது கிரேக்க எபிரேய மொழிகள் படிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. கிரேக்க மொழியில் பட்டணங்களுக்கு அதிபதியாயிரு என்ற வார்த்தைக்கு முழு அர்த்தம் நட்சத்திர பட்டணங்களுக்கு நீ அதிபதியாயிரு என்று அங்கு ஆண்டவர் சொல்லுகிறார். ஆகவே ஆண்டவரோடு கூட நாமும் அரசாட்சி செய்ய போகிறோம். முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை. இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக, ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள். **வெளி 20. 6** நம்முடைய உலகம் இந்த அண்டசராசரத்தின் மத்திய உலகமாக மாறபோகிறது. மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார் **வெளி 21. 3** பரமண்டலத்தில் இருக்கிற தேவனுடைய வாசஸ்தலம் நம்முடைய பூமியிலே வந்து விடுகிறது சேனைகளின் **கர்த்தர்** சொல்லுகிறார்: கொஞ்சக்காலத்துக்குள்ளே இன்னும் ஒருதரம் நான் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் வெட்டாந்தரையையும் அசையப்பண்ணுவேன். **ஆகாய் 2. 6** நீ யூதாவின் தலைவனாகிய செருபாபேலோடே சொல்லவேண்டியது என்னவென்றால், நான் வானத்தையும் பூமியையும் அசையப்பண்ணி, **ஆகாய் 2. 21** பரமண்டலத்திலிருக்கிற அந்த விசேஷமான மத்திய சக்தியின் வல்லமையை நம்முடைய உலகத்தில் அவர் மாற்றி இந்த அண்டசராசரங்களே அசைந்து குலுங்கும் என்று விஞ்ஞானிகளும் தேவனுடைய பிள்ளைகளும் கருதுகி றார்கள். சீக்கரத்தில் நாம் முகமுகமாய் ஆண்டவரை பார்க்க போகிறோம். அந்த பரலோகத்தில் சாத்தான் இல்லை

பாவ மில்லை. ஆகவே பரலோகத்தில் நாம் ஆசாரியர்களாக இருப் போம். மற்ற உலகத்தின் மக்கள் ஆண்டவரை தொழுதுகொள்ள வரும்போது நாம் ராஜரீக ஆசாரியர்களாக இருப்போம். ஆனபடியால், இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச்



சேவிக்கிறார்கள்; சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார். இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவதுமில்லை; வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள்மேல் படுவதுமில்லை. சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக் குட்டியானவரே இவர்களைமேய்த்து, இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்; தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார் என்றான். **வெளி 7. 15-17** ஆண்டவர்தான் நம்மை நடத்துவார் என்று எழுதப்பட்டி ருக்கிறது. ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள் இவர்களே; கற்புள்ளவர்கள் இவர்களே; ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே; இவர்கள் மனுஷரிலிருந்து தேவனுக்கும் ஆட்டுக்குட்டி யானவருக்கும் முதற்பலனாக மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள். **வெளி 14. 4** கர்த்தர் நம்மை ஒவ்வொரு உலகமாக அழைத்துசென்று காணாமல் போன ஆடுகளை கண்டுபிடித்தேன் என்று மிகுந்த சந்தோஷப்படுவார். இந்த உலகத்தின் மக்களாகிய நாம் துன்பப்படுகிறோம் துயரப்படுகிறோம் , அதை நாம் பொறுத்து தான் ஆகவேண்டும். எவ்வளவுக்கு நாம் துன்பப்படுகிறோமோ அவ்வளவுக்கதிகமாக நாம் இன்பம் அடைவோம். அவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டி யானவருடைய பாட்டையும் பாடி: சர்வவல்லமையுள்ள தேவனாகிய **கர்த்தாவே**, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்த வான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள். **வெளி 15. 3** மோசே பார்வோனிடத்திலிருந்து விடுதலையானபோது பாடின பாட்டைதான் நாமும் பரலோகத்திலே பாடபோகிறோம். ஆகவே அது ஒரு விடுதலையின் பாட்டு ஆட்டுகுட்டியானவர் இந்த பாவ உலகத்திலிருந்து நம்மை மீட்ட விடுதலையின் பாட்டை நாமும் பாடபோகிறோம். அந்த **பரலோத்திற்கு நாம் போய் செய்யும் காரியங்கள் என்ன?** இரட்சிப்பின் விஞ்ஞானத்தை பார்க்கிலும் இந்த உலகத்தில் வேறு எந்த விஞ்ஞானமும் அதற்கு ஈடாகாது. இவ்வளவு பெரிய ஆண்டவர் மனித உருவை எப்படி எடுத்தார் என்ற கேள்வி, அந்த மனு உருவை எடுத்த ஆண்டவர் எதற்காக கஷ்ட்டப்பட்டார் என்ற கேள்வி, வானாதி வானங்களும் உம்மை கொள்ளாதே இந்த ஆலயத்தை கட்டியிருக்கிறீர்களே

எப்படி? என்ற கேள்வி, எப்படி அவர் மறுரூபம் எடுத்தார்?எப்படி அவர் பாவத்தை ஜெயித்தார்? எப்படி அவர் மரணத்தை ஜெயித்தார்? என்ற கேள்விகள்தான் இரட்சிப்பின் விஞ்ஞானத்தை குறித்து நாம் ஆராயப்போகிறோம். நான் படைக்கப்போகிற புதியவானமும் புதிய பூமியும் எனக்கு முன்பாக நிற்பதுபோல, உங்கள் சந்ததியும் உங்கள் நாமமும் நிற்குமென்று **கர்த்தர்** சொல்லுகிறார். அப்பொழுது மாதந்தோறும், ஓய்வுநாள்தோறும், மாம்சமான யாவரும் எனக்கு முன்பாகத் தொழுதுகொள்வார்களென்று **கர்த்தர்** சொல்லுகிறார். **ஏசாயா 66.22,23** இந்த உலகத்தை அக்கினியால் அழித்து திரும்ப ஆண்டவர் புதிய வானத்தையும் புதிய பூமியையும் படைக்கப்போகிறார் என்று வேதம் சொல்லுகிறது. இதோ, நான் புதிய



வானத்தையும் புதிய பூமியையும் சிருஷ்டிக்கிறேன்; முந்தினவைகள் இனி நினைக்கப்படுவதுமில்லை, மனதிலே தோன்றுவதுமில்லை. நான் சிருஷ்டிக்கிறதினாலே நீங்கள் என்றென்றைக்கும் மகிழ்ந்து களிகூர்ந்திருங்கள்; இதோ, எருசலேமைக் களிகூருதலாகவும், அதின் ஜனத்தை மகிழ்ச்சியாகவும் சிருஷ்டிக்கிறேன். நான் எருசலேமின்மேல் களிகூர்ந்து, என் ஜனத்தின்மேல் மகிழ்ச்சியாயிருப்பேன்; அழுகையின் சத்தமும், கூக்குரலின் சத்தமும் அதில் இனிக் கேட்கப்படுவதில்லை. **ஏசாயா 65.17-19** மற்றும் சங்கீதத்திலே நீர் உம்முடைய ஆவியை அனுப்பும்போது, அவைகள் சிருஷ்டிக்கப்படும்; நீர் பூமியின் ரூபத்தையும் புதிதாக்குகிறீர் **சங்கீதம் 104.30**





நம்முடைய பாழாய்போன உலகத்தை ஆண்டவர் திரும்பவும் புதிதாக்குகிறார். முன்பைவிட இந்த உலகத்தை நூறு மடங்கு மிக அழகாக ஆண்டவர் உருவாக்கபோகிறார். இந்த புதிய வானத்திலும் புதிய பூமியிலும் தொழுகையிருக்கும் என்று ஆண்டவர் சொல்லுகிறார். மாதந்தோறும் ஓய்வுநாள்தோறும் ஆண்டவரை தொழு வார்கள். ஆண்டவர் தொழுகைக்கென்று ஒரு விசேஷமான நாளை வைத்திருக்கிறார். அதுதான் ஓய்வுநாள். மாதந்தோறும் எதற்காக அவரை தொழுதுக்கொள்ள வருகிறார்கள்? நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள். **வெளி 22.2** இந்த ஜீவவிருட்சத்தின் கனி மாதத்திற்கு ஒரு முறை கனிகளை கொடுக்கும் அதனால் யாவரும் மாதத்திற்கு ஒருமுறை வருவார்கள். அப்படியென்றால் அந்த மாதத்திற்கு ஒருமுறை என்ற அந்த நாள் எதுவென்றால் அமாவாசையாக இருக்கிறது என்று வேதம் சொல்லுகிறது. அந்த பழத்தை



சாப்பிடும்போது நித்திய நித்தியமாக வாழம்படி பயன்தருகிறது வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருப்பார்கள், திராட்சத் தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனியைப் புசிப்பார்கள். அவர்கள் கட்டுகிறதும், வேறொருவர் குடியிருக்கிறதும், அவர்கள் நாட்டுகிறதும், வேறொருவர் கனிபுசிக்கிறது மாயிருப்பதில்லை; ஏனெனில் விருட்சத்தின் நாட்களைப்போல என் ஜனத்தின் நாட்களிருக்கும்; நான் தெரிந்து கொண்டவர்கள் தங்கள் கைகளின் கிரியைகளை நெடுநாளாய் அநுபவிப்பார்கள். **ஏசாயா 65.21,22** ஆகவே புதிய எருசலேமிலே ஆண்டவரால் கட்டப்பட்ட வீடு நமக்கு இருக்கிறது. அது நகரத்தினுடைய வீடு. அதுமட்டுமல்லாமல் நகரத்தின் வெளிபுரத்தில் புதிய பூமியிலே நமக்கு இஷ்ட்டமான இடத்திலே நாம் இடத்தை தெரிந்துகொண்டு இன்னும் வீடுகளை கட்டிக்கொள்வோம் என்று வேதம் சொல்லுகிறது. நாம் என்றன்றைக்கும் நகரத்தில் இருக்கபோவதில்லை, அந்த நகரத்திற்கு 5 முறைதான் வருவோம். 4 ஓய்வு நாட்கள் ,கனி புசிக்க ஒரு முறை வருவோம். அப்பொழுது அந்த நகரத்திற்கு வரும்போது ஒவ்வொரு ஓய்வுநாள் முழவதும் அவரை வணங்கி தியானித்து அவரை தொழுதுக்கொள்வோம். மற்ற நாட்களிலே உலகத்திலே வீடுகளை கட்டி வாழ்வோம். மனிதன் பாவம் செய்வதற்கு முன்பாக எப்படி இருந்தானோ அதே போல இருப்பான். அடுத்து பரலோகத்திற்கு போகும்போது நமது நண்பர்களை நாம் அறிந்துக்கொள்ள முடியமா? நமது உருவமானது மகிமையின் சரீரத்தை உடையதாக இருந்தாலும் நம்முடைய முக லட்சனம் அப்படியேதான் இருக்கும். ஆகவே மக்கள்

நாம் யார் என்று நம்மை நன்றாய் அறிந்துக்கொள்ளுவார்கள்.




ஆகவே தேவனுடைய பிள்ளைகளே! உலக வாழ்வும் பரலோக வாழ்வும் என்ற இரண்டு வாழ்விலே எதை நாம் தெரிந்துக்கொள்ளபோகிறோம்? இயேசு கிறிஸ்து நமக்காக இந்த உலகத்திலே வந்து நம்மை மீட்கபடாதபாடுகளை பட்டு நமக்காக



மரணமடைந்து சென்றார் .




மீட்டுக்கொள்ளப் பட்ட நாம் வாழ்நாள் முழவதும் உண்மையும் உத்தமுமாய் நடந்து அவர் கொடுக்கபோகும் அந்த நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ள நாம் பிரயாசப்படவேண்டாமா? அதற்காக நாம் விடாமுயற்சி யெடுத்து பரலோகத்திற்கு செல்ல நாம் ஆயத்தமாகுவோம் ஆமென்.

